பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**05 09 2026 SATURDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** வளர்ச்சியடைந்த இந்தியாவுடன் ஆரோக்கியமான இந்தியாவையும் உருவாக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2)** அரசு ஊழியர்களின் நலனை உறுதி செய்யும் வகையில் பணியாளர் நடைமுறைச் சட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

**3)** தமிழகத்தில் உள்ள கடைகளில் தமிழில் பெயர் பலகைகள் வைக்க வேண்டும் என்ற மாநில அரசின் உத்தரவை நவம்பர் ஒன்றாம் தேதிக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**4)** டாஸ்மாக் ஊழியர்கள் மீது அரசுக்கு பழிவாங்கும் நடவடிக்கை ஏதும் இல்லை என்று மாநில அமைச்சர் திரு விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

**5)** **Almaty** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Syndrella Das — Sutirtha Mukherjee** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>

**2047-**ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவுடன் ஆரோக்கியமான இந்தியாவையும் உருவாக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற இருதய அறுவை சிகிச்சை நிபுணர்களின் கருத்தரங்கில் உரையாற்றிய அவர், மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் இதற்காக பங்காற்ற வேண்டும் என்று கூறினார்.

இதய நோய் சிகிச்சை ஆராய்ச்சிக்கு நமது மருத்துவர்கள் பங்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மருத்துவத்துறையில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் நோயாளிகளின் சிகிச்சைக்கு பயனுள்ளதாக அமைய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

மருத்துவ சிகிச்சை மனித உரிமை என்று கூறிய அவர், அனைவருக்கும் தரமான சிகிச்சை அளிப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதற்கு, இன்று தொடங்கப்பட்ட இந்திய இருதய வால்வு பதிவகம் மிகவும் முக்கியமானது என்று திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறினார்.

<<<<<<<>>>>>

அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலனை உறுதி செய்யும் வகையில் பணியாளர் நடைமுறைச் சட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய பணியாளர் நல அமைச்சகம் இதற்காக பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டுவந்துள்ளதாக தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் பணியாளர்களின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை கொண்டுவந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய செயலகத்தில் பணியாற்றி காலமான ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், காலமான ஊழியர்களின் குடும்பத்தினருக்கு அனைத்து உதவிகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<<<>>>>>

சுதந்திர போராட்டத்தின்போது சுதேசி கப்பல் நிறுவனத்தை தொடங்கி, தமிழக மக்களிடையே சுதேசி உணர்வை விதைத்த

கப்பலோட்டிய தமிழன் வ உ சிதம்பரனாரின் பிறந்த தினத்தையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் அன்னாருக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் தமது சொத்துகளை தியாகம் செய்த தன்னலமற்ற தேசபக்தராக வ உ சிதம்பரனார் திகழ்ந்தார் என்று கூறியுள்ளார்.

சிறை தண்டனை கொடுமைகளையும் பொருட்படுத்தாமல் நாட்டின் விடுதலைக்காக செக்கிழுத்தவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வ உ சி-யின் வீரத்தையும், தியாகத்தையும் அவரது பிறந்தநாளில் போற்றுவோம் என்றும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்

<<<<<<<>>>>>

டாஸ்மாக் ஊழியர்கள் மீது அரசுக்கு பழிவாங்கும் நடவடிக்கை ஏதும் இல்லை என்று மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு விக்னேஷ் கூறியுள்ளார்.

கோவை மாவட்டம் பேரூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முன்னறிவிப்பின்றி டாஸ்மாக் கடையை மூடியவர்கள் மீண்டும் பணிக்கு திரும்பியுள்ளதாக தெரிவித்தார்.

டாஸ்மாக் நிர்வாகம் சிறப்பாக செயல்படுவதற்கு ஊழியர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு முந்தைய அரசுகள் உரிய தீர்வுகாணவில்லை என்றும் அவர் கூறினார்.

முன்னறிவிப்பின்றி வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடும் டாஸ்மாக் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு விக்னேஷ் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

ஆசிரியர் தினத்தையொட்டி, சென்னையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழகத்தை சேர்ந்த 396 ஆசிரியர்களுக்கு மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் நல்லாசிரியர் விருதுகளை வழங்கினார்.

இதனிடையே, நல்லாசிரியர் விருது பெற்ற சீர்காழியை சேர்ந்த முதுகலை ஆசிரியர் திரு ராம்குமார், இந்த விருது கிடைத்துள்ளது மாணவர்களுக்காக உழைக்க வேண்டும் என்ற ஊக்கத்தை தமக்கு அளிப்பதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — ராம்குமார் - 38 Sec.)***

<<<<<<<>>>>>>

சென்னை மாநகராட்சி உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள கடைகளுக்கு தமிழில் பெயர் பலகைகள் வைக்க வேண்டும் என்ற மாநில அரசின் உத்தரவை கடை உரிமையாளர்கள் பின்பற்ற வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த நீதிபதி திரு சுரேந்தர், வரும் நவம்பர் மாதம் ஒன்றாம் தேதிக்குள் தமிழில் பெயர் பலகைகள் வைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்தார்.

<<<<<<<>>>>>>

தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டுள்ளதாக மீன்வளத்துறை அமைச்சர் திரு ஸ்ரீநாத் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் நடைபெற்ற இந்திய தொழில் கூட்டமைப்பின் மாநில அளவிலான தொழில் வளர்ச்சிக் கூட்டத்தில் பேசிய அவர், தூத்துக்குடியில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும், புதிய தொழில்களை ஊக்கவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

காற்றாலை மற்றும் பசுமை எரிசக்தித் திட்டங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான அரசின் திட்டங்களை தொழில் முனைவோர் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் திரு ஸ்ரீநாத் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

நேபாள பெருவெள்ளத்தில் காணாமல் போனவர்களை அடையாளம் காண்பதற்கு ஏதுவாக, சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மண்டலங்களில் உள்ள தடய அறிவியல் ஆய்வகங்களில் **DNA** பரிசோதனை இன்று தொடங்கியது.

தஞ்சாவூரில் இதனை பார்வையிட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சியர் திருமதி ரேவதி, **13** பேரின் **DNA** மாதிரிகள் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

***(Sound Byte — ஆட்சியர் ரேவதி - 23 Sec.)***

<<<<<<<>>>>>

சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த **24** மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று

வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 48 Sec. )***

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

வ.உ. சிதம்பரனாரின் பிறந்த தினத்தை ஒட்டி, கோவையில் உள்ள அன்னாரது சிலைக்கு மாநில அமைச்சர் திரு. சம்பத்குமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

----------------

விழுப்புரம் சட்டக்கல்லூரியில் இன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு ஆனந்த் வெங்கடேஷ் பட்டங்களை வழங்கினார்.

-------------------

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் முதுகு தண்டுவட பாதிப்பு தினத்தையொட்டி விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி சினேகா தொடங்கிவைத்தார்.

----------------

கடலூர் மாவட்டம் திருப்பாதிரி புலியூர், பண்ருட்டி வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வெள்ளத்தடுப்புப்

பணிகளை ஆட்சியர் திரு சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

-------------------

நாமக்கல் மாவட்டம் தெத்துக்காடு பகுதியில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமின் தொடக்க விழா இன்று நடைபெற்றது.

------------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் முதுகு தண்டுவட பாதிப்பு தினத்தையொட்டி, ஆட்சியர் திருமதி பத்மஜா விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

---------------

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சென்னை அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் நடைபெற்று வரும் பணிகளை மாநில தலைமைச் செயலாளர் திரு சாய்குமார், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Almaty** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Syndrella Das — Sutirtha Mukherjee** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **11-6, 12-10, 8-11, 11-6** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Diya Chitale — Yashaswini Ghorpade** இணையை வென்றது.

----------------

எகிப்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dev Javia** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

-------------

ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<<<<END>>>>>>**